# மற்ற இரண்டு பேரும் சோதோமிற்குச் சென்று





வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# ஆதியாகமம் 19:1

அந்த இரண்டு தூதரும்
சாயங்காலத்திலே சோதோமுக்கு
வந்தார்கள்; லோத்து
சோதோமின் வாசலிலே
உட்கார்ந்திருந்தான். அவர்களைக்
கண்டு, லோத்து எழுந்து
எதிர்கொண்டு தரைமட்டும்
குனிந்து:

அப்படியாகவே ஆபிரகாமும் கூட தூசி படிந்த வஸ்திரத்தோடு இருந்த இந்த மனிதனை சந்தித்தபோது அவரை தனியாக வரும்படி அழைத்ததைப் பார்க்கிறோம். **மற்ற இரண்டு பேரும் சோதோமிற்குச் சென்று சோதோமிலிருக்கிறவர்களை வெளியே அழைத்ததைப் பார்க்கிறோம். அது நம்முடைய நாட்களில் இருக்கிற நவீன கால பில்லிகிரஹாமிற்கு ஒத்ததாய் ஓர் அழகான காட்சியாய் இருக்கிறது.**

*செய்தி: 64-06-17 எல்லா காலங்களிலும் அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட கிறிஸ்து*

★★★★★

~ 4 ~

# ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது





63. அதன்பிறகு நான் வேறொரு ஞாபகச் சின்னத்தைக் குறித்து சிந்தித்துப் பார்க்கிறேன், அது ஒருநாள், ஒரு பெண் தவறான தெரிந்தெடுத்தலைச் செய்திருந்த போது. அவள் நீர்பாய்ச்சலான சம பூமியில் தங்க (stay up) கூடாது என தீர்மானித் தாள், அல்லது சோதோம் கொமோராவுடைய நீர்ப்பாய்ச்சலான சமபூமியில் தங்கியிருந்து, கூடிப்பழகும் இயல்புடையவளாய், அந்நாட்களில் இருந்த அந்த மற்ற பெண்களைப் போன்று ஜீவிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

64. வறண்ட தரிசு நில பூமியில் தங்கின சாராளைப் போன்று அவள் நல்ல தெரிந்து கொள்ளுதலைச் செய்யவில்லை. **அவள் (சாராள்) மாத்திரமே தேவனுடைய வார்த்தையை தன்னுடைய இருதயத்தில் வைத்திருந்தாள். அவள் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படிகிறவளாகவும் மிக அருமையானவளாகவும் இருந்தாள், அவள் அவ்வளவாய், அவனை, "ஆண்டவனே" என்று அழைத்தாள். அங்கு தான் தேவன் இரண்டு தூதர்களோடு இறங்கி**


**வந்து, அந்தக் கூடாரத்தில் அவர்களிடம் விஜயம் செய்தார்.**

65. **ஆனால், திருமதி. லோத்துவோ, அவள் மிகவும் உலகப்பிரகாரமாக ஆகி, உலகத்தின் காரியங்களை ஏற்றுக்கொண்டாள்.** இன்று, மிகவுமாக உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாய் ஆக முடிகிற, நமக்கு அது என்னவொரு பாடமாக இருக்கிறது. நான் மிகவும் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், **இன்று முழு சபையும் மிகவும் உலகப்பிரகாரமான சிந்தையை உடையவர்களாக (worldly-minded) ஆகிக் கொண்டிருக்கிறது.** இப்பொழுது, ஒருக்கால், திருமதி. லோத்து, அவள் அங்கே போனபோது, அதைச் செய்ய கருதாமல் இருந்திருக்கலாம். அவள், "கூடிப்பழகும் இயல்புடையவளாய் இருப்பேன்" என்று நினைத்தாள். கூடிப்பழகும் இயல்புடையவர்களாய் இருப்பது எல்லாம் சரிதான், **ஆனால் உலகத்தின்**

## பழக்கவழக்கங்களை எடுத்துக் கொள்ளாதீர்கள் (take up).

*செய்தி: காலத்தால் பரீட்சிக்கப்பட்ட தேவனுடைய ஞாபகச் சின்னங்கள், ஆகஸ்டு 18, 1957* **(இந்தச் செய்தி இறுதி சரிபார்ப்பில் உள்ளது)**





ஜீவனுள்ள
தேவனுடைய
சபையானது பூமியை
சுதந்தரிக்க
வேண்டியிருப்பதால்,
அதற்கு எந்த
இரகசியங்களுமே
மறைக்கப் படாது.

67. இப்பொழுது நினைவிருக்கட்டும், அவர்களில் இருவர் தூதர்களாய் இருந்தனர். தூதர்கள் மானிட சரீரத்தில் இருந்தனர். **அவர்களில் ஒருவர் தேவனாகவே இருந்தார்.** தேவனாயிருந்த அந்த ஒருவர் கூடாரப்பக்கம் தன்னுடைய முதுகை திருப்பியிருந்தார்.

68. **சாராள் கூடாரத்தில் இருந்தாள். ஒரு ஸ்திரீ ஒவ்வொரு முறையும் யாராவது ஒருவர் வரும்பொழுது, அவளுடைய கணவன் என்ன செய்ய வேண்டும் என்று கூறும்படி வெளியே செல்லாமல், அதைப் போன்ற தன்னுடைய இடத்தில் தங்கியிருப்பதையே நான் காண விரும்புகிறேன். ஆனால் அவள் கூடாரத்தில் இருந்தாள்.** எனவே ஒருக்கால் அவள் ஏதோ ஒன்றை செய்து கொண்டு அல்லது தட்டுமுட்டு பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந் திருப்பாள் என்பதில் சந்தேகமேயில்லை.

69. **தேவனாயிருந்த இந்த ஒருவர், சோதோமையே நோக்கியவாறு பார்த்துக் கொண்டிருந்தார். மேலும் அவர் என்ன செய்யப் போவதாக இருந்தார் என்பதை**

**அவர் அவர்களிடத்தில் கூறினார். எனவே இரண்டு தூதர்களும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க அங்கே சென்றனர். ஆனால் தேவனாய் இருந்த அந்த ஒருவர் அங்கேயே இருந்துவிட்டார். மேலும், அவர், "எனக்குத் தெரிந்த இரகசியங்களை நான் ஆபிரகாமிற்கு மறைத்து வைக்கப் போவதில்லை. ஏனென்றால் அவன் உலகத்தின் சுதந்தரவாளியாக இருக்கப் போகிறானே" என்றார்.**

70. **ஓ, சபையே, இந்த காலையில் நாம் கர்த்தருடைய வருகையின் இரகசியங்களை அறிந்து கொள்ள உரிமை பெற்றுள்ளோம்.** ஏனென்றால், "சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப் படுவார்கள். நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்." **ஆகையால் ஜீவனுள்ள தேவனுடைய**

**சபையானது பூமியை சுதந்தரிக்க வேண்டியிருப்பதால், அதற்கு எந்த இரகசியங்களுமே மறைக்கப் பட்டிராது.**

*செய்தி: 59-03-01M வாசல் இடுக்கமாய் உள்ளது*